பிரித்தானிய தமிழ்மொழிப் பரீட்சை சபை
BRITISH TAMIL EXAMINATION BOARD (BTEB)
www.bteb.org.uk

# தமிழ் – வாசிப்பு பரீட்சை
# TAMIL - READING EXAMINATION
# தரம் (GRADE) - 5

**Version B**

**Additional materials:**
**Soft pencil (type B or HB)**
**Soft clean eraser**

**TIME 45 minutes**

## INSTRUCTIONS TO CANDIDATES

**Do not open this booklet until you are told to do so.**

**Answer all questions.**

**Write your name, Centre number and candidate number in the spaces on this page.**

**Write your answers on the question paper itself.**

**Use pencil**

**At the end of the test you must hand in the question paper to your supervisor.**

**Dictionaries must not be used.**

| Date | Centre Name | Centre Number |
|---|---|---|
| / / | | |

| Candidate : Name | Candidate : Number |
|---|---|
| | |

**This question paper consists of 6 printed pages.**

## PART I

**Question 1-5**

**Look at the words below: to which group do they belong: Animals, Tree or fruits. Choose the correct answer A, B or C and (√) in the box.**

| A | B | C |
|---|---|---|
|  |  |  |

| | | A | B | C |
|---|---|---|---|---|
| 1. | ஆலமரம் | | | |
| 2. | தோடம்பழம் | | | |
| 3. | எருது | | | |
| 4. | யானை | | | |
| 5. | அன்னாசி | | | |

## PART II

**Question 6-10**

**Read the following paragraph and answer the questions.**

லாலா லாலா லாலாலா
லாலா லாலா லாலாலா

வண்டி வண்டி மோட்டார் வண்டி
கறுப்பு வீதியில் ஓடுது பார்
இலண்டன் நகர வீதிகளில்
வண்ணமாய் ஓடும் வண்டியைப் பார்

ஐந்து போர்கள் அடக்கமாக
அமர்ந்து பயணம் செய்திடலாம்
மழையும் வெயிலும் தொட்டிடாமல்
சுகமாய்ப் பயணம் செய்யும் வண்டி

எங்கள் வீட்டின் எந்திரமாம்
எம்மை எல்லாம் சுமக்கும் வண்டி
எங்கள் பெற்றோர் வைத்திரக்கும்
எனக்குப் பிடித்த மோட்டார் வண்டி

- கவிஞர்: இலண்டன் சுதாகினி

6. Which vehicle runs on the Black Road

A. கார் B. லொறி C. பஸ்

7. Which town road has colourful vehicle

A. பரிஸ் B. இலண்டன் C. லிவர் பூல்

8. How many people can travel in the vehicle?

A. 3 B. 5 C. 8

9. What is the weather factors protect by the car

A. மழை, வெய்யில் B. காற்று. மின்னல் C. மின்னல், இடி

10. Who keep this vehicle

A. எனது ஆசிரியர் B. எனது பெற்றோர் C. எனது அண்ணா

## PART III

### Question 11-15

## Read the paragraph and write the answer to the following questions.

சித்திரைப் புதுவருடம்

உலகில் உள்ள மக்கள் அனைவரும் புதுவருடம் கொண்டாடுகிறார்கள். வருடத்தில் ஒரு நாள் புதுவருட நாள் ஆகும். தமிழர்கள் சித்திரை மாதத்தில் தம் புதுவருடத்தை கொண்டாடுகிறார்கள். தமிழர்கள் உலகம் முழுவதும் பரந்து வாழ்கிறார்கள். ஆனாலும் இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் மொறீசியஸ் பீஜி, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் அதிகம் வாழ்கிறார்கள் புதுவருடத்தினத்தில் எல்லோரும் புதிய உடைகளை அணிவார்கள். கோவிலுக்கு செல்வார்கள். தமக்குப் பிடித்த உணவுகளையும் இனிப்புப் பலகாரங்களையும் செய்வார்கள். அவற்றை உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து உண்டு மகிழ்வார்கள். இந்நாளில் விளையாட்டு போட்டிகள்? களியாட்ட நிகழ்ச்சிகள் என்பனவற்றை செய்தும் பகிர்ந்தும் மகிழ்வார்கள். இப்புதுவருடநாளில் புதிய முயற்சிகளை ஆரம்பித்தால் சிறப்பாக அமையும் என்பது தமிழர்களின் ஓர் நம்பிக்கை. புதுவருட நாளில் நன்றாக இருந்தால் இந்த வருடம் முழுவதும் சிறப்பாக அமையும் என்பது மனிதர்களின் நம்பிக்கை. அதனால் தான் ஒருவருக்கொருவர் இந்நாளில் நல்வாழ்த்துக்ககளைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். தமிழர்கள் தாம் எங்கு சென்றாலும் தம் மொழி கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை எடுத்துச் செல்ல தவறுவதில்லை.

11. Who celebrates New Year in April

A. Tamils B. Chinese C. Asian

12. What do you normally eat on your New Year day?

A. Usual food B. Special food C. Nothing

13. Tamil people, where they go to pray on New Year day?

A. Hindu Temple B. Church C. Buddhist Temple

14. What events can be done on Tamil New Year’s day?

A. Start New projects B. Stop the new project C. Doing nothing

15. Tamils when they migrate to other countries what do they take with them?

A. Lot of money B. Their culture c. Passport

## PART IV

**Question 16-20**

**Read and choose the correct answer to the questions. A,B or C and write in the box.**

இலங்கையின் மிகப்பெரும் விவசாய பூமியான வன்னி பெருநிலப்பரப்பின் வயல்களில் கடுமையாக உழைத்து ஊருக்கும் நாட்டுக்கும் அரிசி வழங்கி வந்த விவசாய குடிமக்கள் இன்று ஒருவேளை சோற்றுக்கு கையேந்தும் நிலையில் வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாம்களில் அபயம் தேடியுள்ளனர்.

ஊசலாடும் உயிரைத் தவிர அனைத்தையும் முழுவதுமாக இழந்து அகதிகளாக்கப்பட்டிருக்கும் இந்த மக்களின் பூர்வீக விவசாயப் பாரம்பரியத்தை தெரிந்தவர்களுக்கு இவர்களது இன்றைய நிலைமை எவ்வளவு துயரமானது என்பது புரியும்.

எப்போதுமே பல மாதங்களுக்குத் தேவையான நெல் மூட்டைகளை வீடுகளில் குவித்து வைத்து அயலவர்களுக்கும் சொந்தங்களுக்கும் வேண்டியளவு வழங்கி வளமாக வாழ்ந்து வந்த இவர்கள், இப்பொது ஒரு சோற்றுப் பார்சலுக்கு கையேந்தும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளனர். எப்போது எந்த வேளையில் எத்தனை பேர் வந்தாலும் அவர்களுக்கு உணவளித்து மகிழ்ந்தவர்கள். இப்பொது யாராவது கொண்டுவரும் ஒரு பார்சல் சோற்றுக்காக காத்திருக்கிறார்கள்.

விவசாய பூமியின் பாரம்பரிய வாழ்க்கை மரபுகளோடு ஒன்றிட்ட வாழ்க்கையில் ஆதரவும் அன்பும் உபசரிப்பும் பொங்க கூட்டாக வாழ்ந்து வந்தவர்கள். இவர்கள் சொத்து சேர்ப்பதிலும் சுகபோக வாழ்க்கையிலும் அதிக நாட்டம் கொள்ளாவிட்டாலும், தேவையான வளங்களுடன் திருப்தியாக வாழ்ந்தவர்கள்.

16. Vanni is biggest land in Sri lanka for

A. Cattle farm B. Agriculture C. Plantation ☐

17. A main grain product in Vannia

A. Wheat B. Rice C. Oats ☐

18. Vanni people where they stay when they moved from their own land

A. Detention camp B. Agriculture land C. City ☐

19. What is the grain Vanni people keep stock at their home

A. Paddy B. Wheat C. Green grass ☐

20. Vanni people living as

A. Collective family B. Single family c.Not stated ☐

## PART V

### Question 21-25

### Read about Tmails and answer the questions. Write the correct letter A, B or C in the appropriate box.

உலகிலே பல மொழிகள் உள்ளன. அவை வெவ்வேறு நாடுகளில் பேசப்படுகின்றன. இந்தியாவும் இலங்கையும் தமிழர்களின் தாய் நாடுகள் ஆகும். இந்நாடுகளில் இருந்தே மலேசியா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா, மொறீசியஸ் ஆகிய நாடுகளில் தமிழர் குடியேறினர். இப்போது அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களிலும் தமிழர் வாழ்கின்றனர்.

21. யார் தமிழ் பேசுவர்?

A. தமிழர்

B. சிங்களவர்

C. தமிழ் தெரிந்த எல்லோரும்

22. உலகில் வாழும் தமிழரின் தாய் மொழி என்ன?

A. தமிழ்

B. ஆங்கிலம்

C. அவர்கள் வாழும் நாட்டின் மொழி

23. தமிழரின் தாய் நாடுகள் எவை

A. இலங்கை, இந்தியா

B. இந்தியா, மொறீசியஸ்

C. இலங்கை, அமெரிக்கா

24. தமிழர்கள் அண்மையில் குடியேறிய நாடுகள் எவை?

A. இலங்கை, இந்தியா

B. மொறீசியஸ், சிங்கப்பூர்

C. அமெரிக்கா, அவுஸ்திரேலியா

25. தமிழர் குடியேறிய புதிய கண்டங்கள் எவை?

A. ஆசியா, ஐரோப்பா

B. அமெரிக்கா, அவுஸ்திரேலியா

C. ஆபிரிக்கா, ஆசியா